HHR17-1-6-TA

# இயேசுவின் கடைசி வார்த்தைகள்: வெளிப்படுத்துதல் புத்தகம் - நிகழ்ச்சி 6

**அறிவிப்பாளர்**: இன்றைக்கு, கிறிஸ்தவர்களின் பெரும்பாலானோர் தங்களுடைய வாழ்நாளில் இயேசு கிறிஸ்து திரும்பவும் பூமிக்கு வந்திடுவார் என விசுவாசிக்கிறார்கள். வெளிப்படுத்தின விசேஷமானது எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை கிறிஸ்தவ சபைகளுக்கு இயேசு கிறிஸ்துவால் கூறப்பட்ட இறுதி வார்த்தைகளாகும். உபத்திரவ காலத்தின் போது பூமியின் மீது வர இருக்கும் கடுமையான நிகழ்வுகளை குறித்து எச்சரிக்கிறார், சாத்தானுக்கு என்ன நடக்கும், அந்திகிறிஸ்துவுக்கு என்னவாகும், கள்ள மார்கத்தை யார் பின்பற்றுவார்கள் என்று கூறுகிறார். அதுமட்டுமல்ல அர்மகெதான் யுத்தத்தில் என்ன நடக்கும், தமது இரண்டாம் வருகையில் என்ன நடக்கும், ஆயிர வருட அரசாட்சி, இறுதி நியாயத்தீர்ப்பு, என்பவைகளை சொல்லி எப்படி தேவன் தமது பிள்ளைகளுக்கு நித்திய எதிர்காலத்தை திட்டமிட்டிருக்கிறார் என்று கூறுகிறார். இந்த தொடரில் தேவன் எதிர்காலத்தில் சம்பவிக்க போகிறவைகளாக சொல்லியிருக்கிற ஒவ்வொரு நிகழ்வுகளையும் நீங்கள் புரிந்துகொள்வதற்கு எதுவாக

வெளிப்படுத்தின விசேஷத்தை அதிகாரம் அதிகாரமாக பார்க்க இருக்கிறோம்.

இந்த தொடரின் இரண்டாவது பாகத்தின் இன்றைய நிகழ்ச்சியின் தலைப்பு, "நியாயத்தீர்ப்புகளும் உபத்திரவ காலத்தின் முக்கிய பங்காளிகளும், வெளிப்படுத்தல் 7 முதல் 13 வரை.

எனது விருந்தினர்கள்: Dr. எட் ஹின்ட்சன், டீன் லிபர்டி பல்கலைகழகத்தின் ஸ்கூல் ஆப் ரிலிஜியன் மற்றும் மதங்களை பற்றிய பிரிவின் விரிவுரையாளர், நாற்பதிற்கும் மேலான புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

Dr. மார்க் ஹிட்ச்காக் டல்லாஸ் இறையியல் செமினரியில் வேதாகமத்தை விவரித்தல் பிரிவின் துணை பேராசிரியராக இருக்கிறார். இவர் வேதாகம தீர்க்க தரிசனங்கள் என்ற தலைப்பில் 30 புத்தகங்களை எழுதியிருக்கிறார், இவர் விசுவாச வேதாக திருச்சபையின் மூத்த போதகராக இருக்கிறார்.

Dr. ரான் ரோடாஸ் ஐவரும் டல்லாஸ் இறையியல் செமினரியில் போதனை செய்கிறார், இவர் தேவ வசனங்கள் ஊழியத்தின் சிறப்பு தலைவராகவும் இருந்து வருகிறார். இவர் தீர்க்கதரிசனம் என்ற தலைப்பில் 70 புத்தகங்களை எழுதியிருக்கிறார். இந்த சிறப்பு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான்தான் ஜான் அன்கெர்பெர்க், உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. இன்றைக்கு நம்முடன் மூன்று சிறந்த தீர்க்கதரிசன வல்லுனர்கள் இருக்கிறார்கள், Dr. எட் ஹின்ட்சன், Dr. மார்க் ஹிட்ச்காக், மற்றும் Dr. ரான் ரோடாஸ், இவர்களை பற்றி சற்று முன்பு கேட்டிருப்பீர்கள். நீங்கள் அந்தி கிறிஸ்துவை பற்றி திரைப்படங்களிலும் உரையாடல்களிலும் சொல்ல கேட்டிருக்க வாய்ப்பிருக்கிறது, இல்லையா. நீங்கள் ஒருவேளை கள்ள தீர்க்கதரிசி மற்றும் அர்மகெதான் யுத்தத்தை பற்றியும் பலவிவரங்களை கேட்டிருக்க வாய்ப்பு இருக்கிறது. இபோதும் அந்த பகுதிகளை வெளிப்படுத்தல் புத்தகத்தில் நாம் பார்க்க இருக்கிறோம் உண்மையாகவே வேதம் இதை பற்றி என்ன சொல்கிறது என்பதை கற்றுக்கொள்ள போகிறோம், சரியா? இது சில தலைவர்களுக்கு உதவியாக இருக்கும். மிக அவசியமாக அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய ஒரு காரியம் என்னவென்று சொன்னால், மிருகத்தின் முத்திரை என்றால் என்ன? அந்தி கிறிஸ்து என்ன செய்வான்? யூத ஜனங்களுக்கு சம்பவிக்கபோவது என்ன? இந்த எல்லா கேள்விகளுக்கும் உண்டான பதில்களை இப்போதே நாம் பார்க்க போகிறோம்.

இப்ப நாம வெளிப்படுத்தல் 12ல இருக்கோம், இப்ப ஏதோ முந்தின எல்லா செய்கைகளையும் அப்படியே கொஞ்சம் நிறுத்தப்பட்டு இடைவேளை விட்டது போல இருக்கு, திடீரென்று கொஞ்சம் அமைதி

நிலவுகிறது, இப்ப விளையாட்டு வீரர்களுடைய மதிப்பெண் பட்டியல் கொடுக்கப்படுகிறது. சரி, எட், நாம இதுவரைக்கும் பார்த்துகொண்டிருக்கும் வீரர்களின் மதிப்பெண் பட்டியலை பற்றி சொல்லுங்க, இங்க என்ன நடக்குது.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:..**இதை, இயேசு யோவானுக்கு வெளிப்படுத்துகிறார் அதாவது இங்கிருக்கிற அடையாளங்களும் அதற்கான அர்த்தங்களையும் அவர் புரிந்துகொள்ளவேண்டும் என்று விரும்புகிறார். இங்க ஒரு ஸ்திரீயை பற்றி சொல்லப்படுகிறது அது இஸ்ரேல் தேசத்தை குறிக்கிறது அங்கிருந்து மேசியா புறப்பட்டு வருவதை கூறுகிறது, ஆண்பிள்ளை வருவார். ஆனா வலுசர்ப்பம், சாத்தான், ஏற்கனவே இந்த பிள்ளையை கொள்ளும்படியாக மேசியா வருவதை தடுக்கும்படி பல முயற்சிகளை செய்து வருகிறது, மேலும் அவர் மீண்டும் இந்த பூமிக்கு வந்து ஆளுகை செய்ய போவதையும் தடுக்க தன்னால் இயன்றதை செய்து வருகிறது. பிரதான தூதனாகிய மீகாவேல் வானமண்டலங்களில் சாத்தானோடு யுத்தம் பண்ணிக்கொண்டு இருக்கிறான். இந்த காட்சிகளுக்கு பின்னால் ஆவிக்குரிய யுத்தம் நடப்பதை பார்க்க முடியும், பூமியில் உண்டாகும் யுத்தம் இந்த பூமியில் தான் நடக்க போகிறது. அதற்கு பிறகு கொஞ்ச காலத்திற்கு சாத்தான் பூமியிலிருந்து தள்ளபப்டுவான். அவன் கோபத்தோடு இருப்பான், தனது கோபத்தை அவன் ஸ்திரீயின் விதத்தில் மீந்தவர்கள் மீது காட்டுவான், அவர்களை வனாந்தரத்திற்கு

துரத்தி கொண்டு போவான். அதற்கு பிறகு நாம பதிமூன்றாம் அதிகாரத்திற்கு வருகிறோம் இங்க சமுத்திரத்தில் இருந்து வரும் மிருகத்தை பற்றி இருக்கு, அது நிச்சயம் அந்தி கிறிஸ்துவாக இருக்கும், அடுத்தது பூமியில் இருந்து வரும் மிருகம், அது கள்ள தீர்க்கதரிசி என்று மிக தெளிவாக சொல்லப்பட்டு இருக்கிறது. அதாவது வலுசர்பமாகிய சாத்தான் இந்த இரண்டு தலைவர்களை பயன்படுத்த துவங்குகிறது, அரசியல் தலைவர் மற்றும் மார்க்க தலைவர், இவர்களை கொண்டு கடைசிகாலத்தில் உலகத்தை தீட்டு படுத்த போகிறது, உலகளாவிய பொருளாதாரத்தை கட்டுபடுத்த போகிறது, உலக அரசாங்கம், உலகளாவிய ஒரே மார்க்கம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சரி. இப்ப, மார்க், நீங்க சொல்லுங்க, அதாவது, பலவிதமான கோணங்களில் பல திரைப்படங்கள் அந்தி கிறிஸ்துவை பற்றி எடுத்து சொல்லியிருக்கிறது, இது இப்போது கேட்டு கொண்டு இருக்கிற சிலருக்கு சுவாரஸ்யமான ஒரு தலைப்பாக காணப்படும் என்று நம்புகிறேன். இப்ப அந்திகிறிஸ்துவின் குனாதிசயங்களை பற்றி பார்க்கலாமா, சமுத்திரத்தில் இருந்து எழும்பும் மிருகம். வேதத்தில் அவனுக்கு பல பெயர்கள் சொல்லப்பட்டு இருக்கிறது. அவனுடைய குணாதிசயங்களை பற்றி சொல்லுங்க, அவனுக்கு இருக்கபோகிற சில சக்திகள், அவன் செய்ய போகிற சில காரியங்களை பற்றியும் சொல்லுங்கள்.

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:..**முதல் முறையாக அவனை பற்றி வேதத்தில் சொல்லப்பட்டு இருக்கிற இடம் எதுன்னு சொன்னா, நான் உறுதியாக நம்புவது, தானியேல் 7 வசனம் எட்டு. அதில் அவன் சிறிய கொம்பு என அழைக்கப்படுகிறான் கடைசி காலத்தில் ஒன்றாக மறுபடியும் கூட்டு சேர இருக்கும் ரோம சாம்ரத்தியில் வருகிற 10 கொம்புகளில் ஒன்றாக இருக்கப்போகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அது, அரசியல் தலைவர்கள் தான.

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:..**நிச்சயமா. தானியேல் 9ல வரப்போகிற பிரபு என்று அவன் சொல்லப்படுகிறான். மேலும் தானியேல் 11ல உறுதிபடுத்தப்பட்ட ராஜா. 2 தெசலோனிக்கேயர் 2 ல அவன் பாவ மனுஷன் என்றும் கேட்டின் மகன் என்றும் சொல்லப்படுகிறான். யோவான் நிருபத்தில் அந்தி கிறிஸ்து என்று அழைக்கப்படுகிறான், 1 யோவானில் பார்க்கிறோம். இறுதியாக வெளிப்படுத்தல் 13 ல அவன் சமுத்திரத்தில் இருந்து எழும்பும் மிருகமாக வர்ணிக்கப்பட்டு இருக்கிறான்.

அவன் என்ன செய்கிறான், அதாவது, அவன் இறுதியாக உலகத்தை நடத்துகிற தலைவனாக வருவான், இந்த உலகத்தை ஆண்டு ஆளுகை செய்கிற ஒரு நிலையில் அவன் வந்து நிர்ப்பான். அவன் எல்லாவற்றிலும் ஒரு பின்னடைவை உண்டாக்க போகிறான். அவன் ஆரம்பத்தில் ஒன்றுமே இல்லாதவனாக வெறுமையானவனாக

சிறியவனாக நுழைய போகிறான், ஏன்னா சின்ன கொம்பாகத்தான் அவனது துவக்கம் இருக்கும். ஆனா அதற்கு பிறகு அவன் தனது தலைமைத்துவத்திலும் வல்லமையிலும் வளர்ந்திடுவான். ஆரம்பத்தில வான் சமாதானமான மனிதனாக வந்திடுவான். சமாதானம் உண்டாக்குதல் என்று நிலையில்தான் நுழைய ஆரம்பிப்பான். இப்ப நம்முடைய உலகில் அத்தியாவசியமானது என்னன்னா சமாதானம் தான், குறிப்பாக மத்திய கிழக்கு பகுதிகளுக்கு. இப்படிதான் அவன் தனது வல்லமையை உரிமையை பெற்றுக்கொள்ள போகிறான். ஆனா அந்த ஏழு ஆண்டுகளின் மத்திய பகுதியில் முகத்திரை கிழிய ஆரம்பிக்கும் என்பது உறுதி, அதாவது, அவன் எதற்காக வந்தான் என்பது அந்த நேரத்தில் வெளிப்பட துவங்கும், முழு உலகத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வகை பார்ப்பது அப்போது தெரியும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சரி, உண்மையில், வேதம் சொல்கிறது இஸ்ரேலுடன் ஒரு சமாதான ஒப்பந்தத்தை செய்து துவங்குவான் என்று, இஸ்ரேலோடு ஒரு உடன்படிக்கை, அந்தி கிறிஸ்துதான் உடன்படிக்கையில் கையெழுத்து போடுவான், சரியா, அப்பத்தா உபத்திரவ காலம் தொடங்குது இல்லையா.

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**..சரியா சொன்னீங்க. இந்த ஒப்பந்தத்தம் கையெழுத்திடப் படும்போதுதான் உபத்திரவ காலம் துவங்குகிறது, அந்த உடன்படிக்கை, இஸ்ரேல் தேசத்துடனான

உடன்படிக்கை. தானியேல் 9:27 இதை தான் நமக்கு சொல்கிறது. அதற்கு பிறகு உபத்திரவ காலத்தின் துவக்கத்தை பற்றி வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம பார்க்க முடியும், முதல் முத்திரையில் இருந்தது போல, வெள்ளை குதிரையின் மீது ஏறிவருகிறவர், இது மேசியா பூமிக்கு வருகிற காரியத்தை குறிப்பதாகவும் காணப்படுகிறது என்று சொல்லலாம். அதோடு அந்திகிறிஸ்து வருகிறதை நாம் இங்கு பார்க்க முடியும், அவன் சாத்தானால் வல்லமை பெறப்பட்டவன். சாத்தான் அவனுக்கு வல்லமையையும் அதிகாரத்தையும் கொடுத்து இருக்கிறான். ஆனா இதுல ஆறுதலான விஷயம் என்ன என்று பார்க்கும்போது, இவை அனைத்தும் தேவனுடைய சர்வத்துவத்திற்கு கீழாக நடத்தப்பட்டு வருகிறது. ஏன்னா மறுபடியும் மறுபடியும் சொல்லப்பட்டு இருக்கிறது வெளிப்படுத்தல் 13ல சொல்லப்படுகிறது, “அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது, அவனுக்கு கொடுக்கப்பட்டு இருந்தது. அப்ப நடக்கிற எல்லா காரியங்களும் தேவனுடைய கட்டுப்பாட்டிற்கு கீழாக தான் நடந்து கொண்டு இருக்கிறது. இந்த மனிதன் எழும்பி வருவதற்கு அவர் அனுமதிக்கிறார், இது தேவனுக்கு எதிராக உண்டாகும் கடைசி எதிர்ப்பு. ஒருவர் இப்படியாக சொன்னார்,  வரலாறு மனிதனுடைய பாவத்தில் இருந்து துவங்கி பாவ மனிதனோடு முடிவடைகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ரான், இப்ப தானியேல் கூட அந்திகிறிஸ்து செய்ய போகிற சில காரியங்களை குறித்து சில

காரியங்களை சொல்கிறார், அதெல்லாம் உபத்திரவ காலத்தின் மத்தியில் நடப்பவை என தெரியும். அந்த நாட்களுக்கு இயேசு யூத ஜனங்களுக்கு சில அறிவுரைகளை கூறியிருக்கிறார், மலைகளுக்கு ஓடுங்கள் என்பதுபோல. அவர் இங்க என்ன சொல்றாரு?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:..**அவர் இங்க ஒரு விஷயத்தை பற்றி பேசுகிறார் அதாவது 'பாழாக்கும் அருவருப்பு'. இந்த பதமானது யூத தேவாலயம் தீட்டுபடுவதை குறிக்கிற ஒரு சொல்லாக காணப்படுகிறது. சரி, இது ஏற்கணவ வரலாற்றில் இருக்கிறது அந்தியோகஸ் எபிபேன்ஸ் ஒருமுறை தேவாலத்திற்குள் பன்றியை பலிகொடுத்த போது சம்பைத்தது. அது ஆலயத்தை தீட்டுபடுத்தினது. அந்தி கிறிஸ்து தேவாலத்தை தீட்டு படுத்திடுவான். அவன் தேவாலயத்திற்குள் உட்காருவது மட்டுமல்ல, அவனுடைய பிரதானிகளால் அவனுக்கு ஒரு உருவச்சிலையை வைக்க கள்ள தீர்க்க தரிசியும் எழும்புவான். இப்ப, இதை பார்க்கும்போது, உடனடியாக நீங்க எருசலேமை விட்டு வெளியேற வேண்டியது அவசியமாகும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இயேசு என்ன சொல்கிறார்?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:..**இயேசு சொல்கிறார், "வீட்டிற்குள் இறங்கு இன்னொரு வஸ்திரத்தை எடுக்க முயற்சிக்க வேண்டாம். அப்போது கற்பவதியாய் இராதபடி வேண்டிக்கொள்; அது குளிர்காலமாய்

இராதபடிக்கு வேண்டிக்கொள். இப்போதே பட்டணத்தை விட்டு வெளியேறு…”

Dr. **ஜான் அன்கெர்பெர்க்**: வெளியேறு.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:..** “… என்றேன்றால் உன்னுடைய வேகம் ஜீவனுக்கும் மரணத்திற்கும் உள்ள இடைவெளியை நிர்ணயிப்பதாக இருக்கிறது. அதாவது, அந்திகிறிஸ்து இஸ்ரேலை இருமடங்கு மேற்கொண்டு இருக்கிறான். அதாவது, ஏழு வருடங்களுக்கான உடன்படிக்கையை நிர்ணயிப்பதாக அவர்கள் நினைத்துகொண்டு இருக்கிறார்கள். ஆனா திடீருன்னு உபத்திரவ காலத்தின் நடுப்பகுதியில் அந்தி கிறிஸ்து யூதர்களுடைய ஆலயத்தில் பலிகளை செலுத்த துவ்னகிடுவான். அவன் அப்படி செய்றதுக்கு ஒரு காரணம் என்னன்னா, ஜான், இதற்கு பிறகு அவன்தான் தேவன் என்று ஜனங்கள் அவனை தொழுதுகொள்ள அவர்களை கட்டாயப்படுத்த துவங்கிடுவான். அதற்கு பிறகு யாரையும் வேறு தேவனையோ அல்லது மற்ற மார்கத்தையோ பின்பற்ற அவன் அனுமதி கொடுக்கவே மாட்டான். அதிலிருந்து அவன் தான் ஆராதிக்க படவேண்டிய நபராக கருதப்படுபவனாக இருப்பான். கள்ள தீர்க்கதரிசியினுடைய பிரதானமான வேலை என்னன்னா உலகளாவிய வகையில் அனைவரும் அந்திகிரிஸ்துவை ஆராதிக்க செய்வதுதான்.

Dr. **ஜான் அன்கெர்பெர்க்**: மிருகத்தின் முத்திரை என்னது?

**டாக்டர் எட் ஹிந்த்சன்:..**இந்த, முத்திரை என்பது, ஜான், பொதுவா டேட்டுவ குறிக்கிற சொல்லாக இருக்கு, சரக்மா' கிரேக்க சொல். சதையை கிழித்து ஒரு வடுவை உண்டாக்கும் அடையாளமாக இருக்கிறது. அதற்கு ஒரு எண் தேவைபடுகிறது, ஒரு பெயர் வேண்டும் அல்லது ஒரு அடையாளம் வேணும். அது மிருகத்தின் பெயராக இருக்கும், மிருகத்தின் எண்ணாக இருக்கும், முத்திரையாக இருக்கும். அந்த எண்களை கூட்டி பார்க்கும்போது 666 என்று வரும் இது அந்த எழுத்துக்களின் எண்களை குறிப்பதாக காணப்படுகிறது. இது நீரோவின் எண்ணோ அல்லது மற்றவர்கள் சொல்ல முயற்சிக்கிற வேறு ஏதோ ஒன்றோ அல்ல. சரியான கூட்டல் கணக்கு வரும்படி அவனுடைய பெயரின் எழுத்துக்களை மாற்றி அமைக்க வேண்டும் அவ்வளவு தான். வரலாறு முழுக்க இதை கண்டுபிடிக்க பலர் முயன்றுகொண்டே இருக்கிறார்கள், யாரு இது? இது சார்லிமேக்னியா? இது நெப்போலியனா? இது ஹிட்லரா? இந்த நபரா இது அவரா இவரா? இது நான் வாக்களிக்காத ஜனாதிபதியா? இது யார்? அதை நாம் அறிந்துகொள்ள எந்த அவசியமும் இல்ல. இதை அறிந்துகொள்ள வேண்டியவர்கள் கைவிடப்பட்டு நிற்க போகிற ஜனங்கள் தான், "இது அந்தி கிறிஸ்துவாக தான் இருக்கணும் அவனுடைய பெயரை கூட்டி பார்க்கும்போது அது 666 ஆகத்தான் இருக்கும்."

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: மார்க், இது உலக பொருளாதரத்தை அவனுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்துகொள்வான் என்பதாக சொல்லப்படுகிறது. இது அவன் எப்படி செய்ய போகிறான்?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:..**சரி, இங்க என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால் மிருகத்தின் முத்திரை இல்லாமல் ஒருவராலும் எதையும் வாங்கவோ விற்கவோ முடியாது. அப்படினா, இந்த மிருகத்தின் முத்திரை என்பது, முதலாவதாக அது, அந்திகிறிஸ்துவோடு செய்யப்படும் உறுதிமொழியின் அடியாளமாக இருக்கபோகிறது. வரலாற்றில் ஒரு தனித்துவமிக்க காலமாக இருக்கும், என நினைக்கிறன், மற்ற நாட்களைவிட வித்தியாசமாக, ஜனங்கள் நேரடியான ஒரு தீர்மானத்தை எடுக்கும் கட்டமாக இருக்கும்: அவங்க இயேசு கிறிஸ்துவை சார்ந்திடுவார்களா, அல்லது அந்திகிறிஸ்துவை சேவிப்பார்களா? அவங்களோட உறுதிமொழியை அவர்கள் கட்டாயம் எடுக்கவேண்டும். அவங்க அப்படி செய்யும்போது, அவனுடைய முத்திரையை அவர்கள் தங்கள் வலது கரங்களில் அல்லது நெற்றியில் பெறுவார்கள். அவர்கள் அவனுக்கு சொந்தம் என்று அர்த்தம். இதனுடைய பலன்களில் ஒன்று என்னன்னா உங்களால வாங்கவும் விற்கவும் முடியும். அது ஒரு கடவு சீட்டு போன்றது, அல்லது டிரேட்மார்க்னு சொல்லலாம், அதாவது, விநியோகத்திற்கு தொடர்புடைய ஒன்று.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: உணவு வாங்கவும் தேவைப்படும்.

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**..ஆமா, உணவிற்கும் அது தேவை. அடிப்படையாக பார்த்தாள், என்னை வணங்கு அல்லது செத்துபோ." இதுதான் அந்த நாட்களின் தாரகமந்திரமாக இருக்கும். இங்க என்ன பார்க்கிறோம் என்றால் பொருளாதார நிலை முழுவதும் அவனுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். அதாவது, உண்மையில், இன்று உலகமானது சுருங்கி கொண்டே போவதுபோல இருக்கு. அதாவது இப்ப உலகளாவிய விதத்தில் பார்க்கும்போது இன்றைக்கு ஒரு மனிதன் அரசியல் மூலமாக உலகையே கட்டுப்படுத்த முடியும் என்பது புலப்படுகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: கட்டுபடுத்த முடியும்.

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**..அதோட எப்படி உலக பொருளாதாரங்கள் ஒன்று இணைந்திடும் என்றும் ஒருநபரின் ஆளுமை இருக்க முடியும் என்றும் பார்க்க முடிகிறது. இதுல இருக்கிற சூழ்ச்சிகளும் திருப்பங்களும் நமக்கு தெரியாது, உண்மையில், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிலைதான் உண்டாகியிருக்கும். ஆனா நமக்கு தெரியும் வேதம் சொல்கிறது ஒரு காலகட்டத்தில் அவனும் அவனுடைய உறுதுணையாக நிற்கும், கள்ள தீர்க்கதரிசியும், உலக பொருளாதாரத்தை கட்டுப்படுத்தும் நபராக இருப்பார்கள்.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:..**என்னுடைய கவனத்தை ஈர்ப்பது எது தெரியுமா, ஜான், இப்பவே சாயலை பார்க்கிறோம், இன்றைக்கு நாம் வாழ்கிற உலக நிலையை பார்க்கும்போது, தேவனை முந்திக்கொண்டு கிறிஸ்துவின் வருகையின் நாட்களை நாம் நிர்ணயிக்க முடியாது. ஆனா: இஸ்ரேல் திரும்பவும் தன்னிடத்திற்கு வந்தாயிற்று; மத்திய கிழக்கு பகுதிகளில் குழப்பம் இருக்கிறது; பல அதிக அளவு சேதத்தை உண்டாக்க தேவையான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. உலக பொருளாதார நிலையிம் இப்போது நிலவி வருகிறது. இதையெல்லாம் பார்க்கும்போது இதெல்லாம் இறுதி காலம் நெருங்கிவிட்டது என்று நமது கவனத்தை ஈர்ப்பதாக இருக்கிறது. மேடை ஆயத்தமாகிவிட்டது. இன்னும் எவ்வளவு காலம் இருக்கு? தேவனுக்கு மட்டும்தான் தெரியும். அதனாலதான் எந்த நேரத்திலும் போக ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பதை மக்கள் தெரிருக்கணும், ஏன்னா அவர் எந்த நேரத்துலயும் வந்திடலாம்.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:..**அதாவது, இங்க இன்னொரு விஷயத்தையும் நாம கவனிக்கணும் அவர் உலக பொருளாதார நிலையின் கட்டுப்பாட்டில் பண பரிவர்த்தனைகள் சொல்ல முடியாத அளவிற்கு சுமூகமான நிலையை சமுதாயத்தில் உண்டாக்கியிருக்கு. பணபுழக்கம் இல்லைதா சமுதாயம் எல்லாருக்கும் வங்கிகணக்கு எண் வந்திடுச்சு, வாங்குவதும் விற்பதும் பரிவர்த்தனைகள் கணக்கு

எண்களில் நடக்குது. இந்த மாதிரியான அமைப்புடன், நமக்கு இந்த நாட்களில் சிறந்த கணினி செயல்பாடுகள் வந்திடுச்சு, இதன் மூலமாக சுலபமா வாங்குவதையும் விர்ப்பதையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும். இப்ப, இதுல சுவாரஸ்யமான ஒன்று ஏற்கனவே புழக்கத்தில் வந்துவிட்டது, ஏன்னா நம்முடைய தேசத்தில், முழு உலகத்தையும் வைத்து பார்க்கும்போது, இப்ப நம்ம கண் முன்னாலயே பணப்புழக்கம் நிறுத்தப்பட்டு விட்டது.

Dr. **ஜான் அன்கெர்பெர்க்**: ஆமா. இந்த உண்மையை பற்றி நாமளும் பேசனுன்னு நினைக்கிறேன், சரி அந்த மிருகத்தின் முத்திரையை எடுத்துகிட்டா, உங்களுடைய குடும்பத்திற்கும் உங்களுக்கு தேவையான உணவை வாங்கவும் நீங்க வாங்கவும் விற்கவும் வியாபாரம் பண்ண உங்களுக்கு வழியை திறந்து கொடுக்கும். ஆனா, தேவனுக்கு முன்பாக அதற்கு கடுமையான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். தேவன் தமது பட்டியலில் இருந்து நம்மை விளக்கிடுவார், இல்லையா? இப்ப உண்மை என்னன்னா, நீங்க அகற்றப்பட்டிடுவீர்கள். அந்தி கிறிஸ்துவோடு கலந்திடுவீர்கள். ஆனா மிருகத்தின் முத்திரையை பெறாத பெற விரும்பாத கிறிஸ்தவர்கள், அவங்களால எந்த உணவையும் வாங்க முடியாது. ஒன்னு அதை வாங்கிக்கணும் இல்லைன்னா.... மரணம் வரை பட்டினியோடு தான் இருக்கவேண்டும், அதாவது, அவங்களுக்கு அதை தவிர வேறு எந்த வழியுமே முன்னால இருக்க வாய்ப்பில்லை. அது ஜனங்கள் கட்டாயம் தீர்மானம் எடுக்க

வேண்டிய நிர்பந்தமான நிலையாக இருக்கும். இதோட ஏதாவது சேர்க்கவேண்டி இருக்குதா?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:..**இப்ப, அதாவது, சிலர் யோசிப்பாங்க என்னன்னா, “சரி, நான் காத்திருந்த பிறகு இயேசுவை ஏற்றுகொள்கிறேன்.” நிச்சயமா, “நா என்னோடு வாழ்க்கையில் பிறகு அவரை ஏற்றுகொள்வேன் என்பார்கள்.” சரி, இன்னும் சிலர் என்ன சொல்வாங்க தெரியுமா, “ஒருவேளை, எடுத்துகொள்ளப்படுதலில் நான் கைவிடப்பட்டாலும் அதற்கு பிறகு நான் நிச்சயம் இரட்சிப்பை பெற்றுகொள்வேன்.” இப்ப, இரட்சிப்பை சுலபமாக பெற்றுகொள்ளுகிற நேரத்தை போன்ற ஒரு காலம் நமக்கு மறுபடியும் கிடைக்காமல் போகும். எடுத்டுக்கொள்ளப்படுதலுக்கு பிறகு இரட்சிப்பை பெற நினைப்பது சுலமாக இருக்காது. இரட்சிக்கப்படுவது என்பது அந்த நாட்களில், மிக மிக கடினமானதாக மாறிடும். அதனால இதை பார்த்துகொண்டு இருப்பவர்களுக்கு சொல்கிறேன், இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு மன்னிப்பை பெற்று அவர் உங்களுக்கு சிலுவையில் மரித்து பெற்றுதந்த விடுதலையை ஏற்றுக்கொள்ளலாமா வேண்டாமா என்று தீர்மானிக்க போராடுகிறீர்களா, இப்போதே தீர்மானியுங்கள். ஏன்னா இந்த காலத்தை விட்டால் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுகொள்ள எளிதான நேரம் உங்களுக்கு கிடைக்காமல் போகலாம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம். நாம திரும்ப வந்தது பார்க்க இருக்கிற காரியம் என்னன்னா அந்த மிருகத்தின் கூட்டாளிகள், அந்தி கிறிஸ்து, கள்ள தீர்க்கதரிசி, கள்ள மார்க்கத்தின் தீர்க்கதரிசி, மார்கத்தின் முகமூடியை வைத்து எப்படி உலகத்தை வஞ்சிக்கும் வல்லமை அவனுக்கு கொடுக்கப்பட்டது என்று பார்ப்போம், ஆல்ரைட்? தொடர்ந்து இணைந்திருங்கள், மீண்டும் உங்களை சந்திக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. இன்று நம்முடன் இருப்பவர்கள் Dr. எட் ஹின்ட்சன், Dr. மார்க் ஹிட்ச்காக், Dr. ரான் ரோடஸ். உண்மையான சம்பவங்களை பற்றி பார்த்துவருகிறோம், முதலாவதாக, மிருகம், அந்தி கிறிஸ்து, பலதரப்பட்ட பெயர்களால் வேதம் முழுவதும் அவனைப்பற்றி சொல்லபப்ட்டு இருக்கிறது, ஆனா இங்க உபத்திர காலத்தின் போது அவன் வெளிப்படுகிறான். அவன் யூதர்களை உபத்திரவப்படுத்துவதையும் எப்படி உபத்திர காலத்தின் துவக்கத்தில் அவன் யூதர்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மீறி நடக்கிறான் என்றும் பார்த்துகொண்டு இருக்கிறோம். சரி, எட், சொல்லுங்க. அதாவது, அவனோடு ஒரு கூட்டாளி இணைகிறான் அதுதான் கள்ள தீர்க்கதரிசி. இன்னொரு விஷயம் இங்க, ஏன் மூன்று பேர் இருக்காங்க? முதல்ல வலுசர்ப்பம் அதுதான் சாத்தான். அடுத்த

மிருகமான அந்தி கிறிஸ்து, அதற்கு அடுத்ததா கள்ள தீர்க்கதரிசி இருக்கான். இந்த மூன்று எதற்காக?

**டாக்டர் எட் ஹிந்த்சன்:..**இது, பரிசுதமற்ற திருத்துவத்தை போன்றதாகும் இதுக்கு சின்ன 't' வைத்து சொல்வாங்க. பிதாவிற்கு எதிராக, குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் எதிராக, இங்க உங்களுக்கு சர்ப்பமும், மிருகமும், கள்ள தீர்க்கதரிசியும் இருக்கு. கள்ள தீர்க்க தரிசி என்பது கள்ள மார்க்க தலைவர். ஆட்டுகுட்டியானவரை போல இருப்பான், ஆனா வலுசர்பத்தை போல பேசுவான், மதவாதி போல தெரியும், ஆனா பிசாசை போல பேசுவான் ஏன்னா அவனுடைய வார்த்தைகள் பிசாசினால் அவனது வல்லமை நிறைந்த வார்த்தைகளாக் ஐருகும். அதனால இங்க எல்லாத்துக்கும் பின்னால இருந்து சாத்தான் அந்திகிறிஸ்து வையும் கள்ள அரசியல் தலைவரையும், அடுத்து இந்த உலகத்தை வஞ்சிக்கும்படி கள்ள மார்க்கத்த தலைவரையும் பயன்படுத்த போகிறான்.

இந்த கள்ள தீர்க்க தரிசி யாராக இருக்கலாம் என்றும் ஜனங்கள் நாள் முழுதும் விவாதித்து கொண்டே இருக்கலாம். கவனிங்க, ஏற்கனவே எடுத்துகொள்ளப்படுதல் சம்பவித்திருந்தால், தேவ பக்தியுள்ளவனாக சொல்லும் எந்த நபரும் இரட்சிக்கப்படாமல் இருக்கணும், மீட்கப்படாம இருக்கணும், உயிர்பிக்கப்படமா இருக்கணும். அது யாராக வேணாலும் இருக்கலாம். பிரெஸ்பிடேரியனாக இருக்கலாம், மெதடிஸ்ட்டாக

இருக்கலாம், கத்தோலிகராக இருக்கலாம், பெந்தேகொஸ்தாக இருக்கலாம், பாப்டிஸ்டாக இருக்கலாம், எதுவாக வேணாலும் இருக்கலாம். அவர் உண்மையான இயேசுவின் விசுவாசியாக இல்லாமல், ஒரு மார்க்கத்தை சார்ந்தவராக மட்டும் இருப்பார். இவர் வஞ்சிக்கப்பட்டவராக இருப்பதால் அவரும் உலக வரலாற்றில் வஞ்சனைகாரர்கள் மற்றும் கள்ள தீர்க்க தரிசிகள் என்ற வரிசையில் இருப்பார்

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆவிக்குரிய வஞ்சகம், ரான், நம்முடைய நாட்களில் இது பெரிதளவில் காணப்படுகிறது. இன்னொன்றையும் பார்க்க முடிகிறது கள்ள தீர்க்கதரிசி வேதத்தில் அவனால் செய்ய முடியும் என்று சொல்லப்படுகிற சிலவற்றை செயல்படுத்த முடியும், அவனை ஏன் ஜனங்கள் பின்பற்றுகிறார்கள் என்று பார்க்க முடிகிறது.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**..ஆமா, என்னை பொருத்தவரைக்கும் இன்றைக்கு கள்ள தீர்க்கதரிசிகளின் கூட்டமானது அந்த பிரதான கள்ள தீர்க்கதரிசிக்கு வழியை ஏற்படுத்துகிறது என்று சொல்வேன். வஞ்சகமானது மிகப்பெரிய அளவில் இருக்க முடியாது. இன்றைக்கு நம் மத்தியில் இருக்கிற கள்ள தீர்க்கதரிசிகள் யோவான் சொன்ன அந்திகிறிஸ்துகளாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சின்னசின்ன அந்திகிறிஸ்துகள்

**டாக்டர் ரான் ரோட்ஸ்:..**சின்ன அந்திகிறிஸ்துகள். அல்லது அந்தி கிறிஸ்துவின் ஆவியினால் ஏவப்பட்டவர்கள். பொதுவாக அவர்களுக்குள் தேவனை குறித்த வஞ்சகமான யோசனைகள் இருக்கும், இயேசு கிறிஸ்துவை பற்றி, சுவிசேஷத்தை பற்றி, கிறிஸ்தவ உபதேசத்தின் மையபொருளை குறித்த வஞ்சகமான யோசனை. இன்றைக்கு மார்க்கங்களின் பட்டியலில் நிறைய மார்க்கங்கள் இணைக்கப்பட்டு தெரிந்தெடுக்க குழப்பமான நிலை நிலவி வருவதால், இன்றைக்கு சில ஜனங்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர இணைத்துக் கொள்ளும் மனப்பான்மையோடு, பொதுவான கருத்தை கண்டுபிடித்து, அல்லது இதை விட இது பெரியது என்று சொல்ல முற்பட்டு, “உண்மையா, நான் ஆன்மீகவாதியா இருக்க விரும்பறேன் ஆனா குறிப்பா இந்த உபதேசத்தை பின்பற்ற எனக்கு எனக்கு மனமில்லை என்கின்றனர்.”

நா, உண்மையில் நிறைய கள்ள பொய் தலைவர்களை சந்தித்திருக்கிறேன் என்பது சொல்ல விரும்புகிறேன். அவங்களோட கருத்தரங்குகளுக்கு போயிருக்கேன். அதாவது விக்கன் கருத்தரங்குகள் போன்றவை, நவ யுக கருத்தரங்குகள் போன்ற கருத்தரங்குகளை சொல்கிறேன். இங்கயும், ஜான், அற்புதங்களை பார்க்க முடியும், அற்புதமான நிகழ்வு என்று சொல்லக்கூடிய காரியங்கள் நடக்கும். இப்ப, இதெல்லாம் அற்புதங்களை மேற்கொள்ளும் அற்புதமாக தெரியும். ஆனா இதை எடுத்துகொள்ளும் ஜனங்களின் நிலை, அவங்க

சொல்வாங்க, “வாவ், இதுதான் உண்மை என்று எனக்கு தோன்றுகிறது. இதுதான் நிஜமாக இருக்கும்.” சரி, அப்படி இருக்குன்னு சொன்னா, இப்ப உண்மையான கள்ள தீர்க்கதரிசி உபத்திர காலத்தின் போது வெளிபடுவான் அப்ப, அவனும் வானத்தில் இருந்து அக்கினியை வர வைக்கிற வேலை செய்வான், அதை பார்த்து நிறைய ஜனங்கள் ஒடப்போராங்கன்றத தெரிந்து கொள்ள வேண்டும், :இதுதான் உண்மையாது. இதுல எனக்கும் பங்கிருக்கணும் நானும் ஒரு பங்கா இருக்கணும்..”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆமா.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:..** “... இதை தான் நான் விசுவாசிக்க வேண்டும் போல இருக்கு,”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: நீங்க வீதியில் நடந்து போயிட்டு இருக்கும்போது திடீருன்னு வானத்தில் இருந்து அக்கினி இறங்கி வந்து உங்களுக்கு முன்னால போயிட்டு இருக்கிற ஐந்து பேரை பட்சித்து போடும்போது உங்க பக்கத்துல இருக்கிறவர் சொல்வார், “நான் தான் இதை செய்தேன்,” அப்ப அவர் சொல்றத கேட்க நீங்க அசையாம நிற்கத்தான செய்வீங்க.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:..**அப்படிதா தோணும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: இப்ப, அதாவது, இன்னொரு விஷயம் இருக்கு, இன்னொரு யோசனை, "நா ஆன்மீகவாது, எல்லா கருத்துக்களையும் வரவேற்கிறேன், நீங்க எல்லாரும் ஒரே ஒரு வழிதான் இருக்குன்னு சொல்றீங்க, இயேசு சொல்கிறார், 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னையல்லாமல் ஒருவனும் பிதாவிடம் வரமுடியாது." சரியா, இதை அவங்க வெறுக்கிறாங்க. ஆனா நா எப்பவும் சொல்வேன், அதாவது, அதாவது இது கொஞ்சம் வித்தியாசமா இருக்கும். தெளிவா சொன்னா, உங்களுக்கு சிக்காகோல ஒரு இடத்துல ஒரு வீடு இருக்கு, சரியா, அங்க லட்சக்கணக்கான மக்கள் இருக்காங்க. ஒருத்தர் கேட்க்கிறார், "உங்க வீட்டிற்கு எப்படி வருணும்? ஆ, நா பரந்த மனப்பான்மை உடைவன், நீங்க எந்த ரோட்ல வேணாலும் வரலாம், இருதியா அங்க தான் வருவீங்ன்னு சொல்லலாமா. உண்மையில், உங்க வீட்டிற்கு போகிற வழி உங்களுக்கு தெரியலைன்னா, உங்களுக்கு திசைன்னு ஒன்னு இல்லைன்னா, நீங்க சிக்காகோவில் இருக்கிற உங்க வீட்டுக்கு நிச்சயமா போய் சேர முடியாது.

**டாக்டர் ரான் ரோட்ஸ்**:..ஆமா, சரியா சொன்னீங்க.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சில காரியங்கள் விடுபட்டு காணப்படும். கள்ள தலைவர்கள் மற்றும் கள்ள மார்கங்களில் இருப்பவர்கள் பேசும்போது, ஒரு விஷயத்தை கவனித்து இருக்கிறேன், அவங்களோட

புத்தகங்களை வாசித்துபார்த்தாலும், அவங்க பேசுவதை கேட்கும்போதும், அவங்கள நிகழ்சிகளில் பார்க்கும்போது, கவனித்திருக்கிறேன் இயேசு கிறிஸ்து யார் என்று வேதம் சொல்கிற காரியத்தை அவர்கள் விசுவாசிப்பதே இல்லை.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:..**சரி, அதுவும் சரிதான். இந்த எல்லா கள்ளத்தனங்களுகும் பின்னால சாத்தான் இருக்கிறான் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எது வேலை செய்யுன்னு அவனுக்கு தெரியும். ஜனங்களுக்கு பொதுவாக சொல்லுவேன் சாத்தான் பொய்யான யோசைனகளை வினியோகிப்பதில் வல்லவன் என்று. எல்லாரும் நம்புகிற வகையில் காரியங்களை மேம்படுத்தி காட்டிடுவான், எல்லாமே வித்தியாசமான தோன்றுவது போல செய்திடுவான், அதாவது, நம்முடைய சமுதாயத்தின் நிலை அப்படி. இதுல அவனுக்கு நல்ல பயிற்சி கிடைத்திருக்கிறது. இதை நான் சொல்வதற்கு காரணம் உபத்திரவ காலத்தின் போது இத்தனை ஆயிரம் வருடங்களாக பெற்ற அனுபவத்தை பயன்படுத்தி அவன் மற்றவர்களை கவர்ந்திழுக்க போகிறான், வெறும் அந்தி கிறிஸ்து மட்டுமல்ல, கள்ள தீர்க்கதரிசியும் உண்டு. எது வேலை செய்யுன்னு அவனுக்கு தெரியும். இந்த பூமியில் பல ஆயிரக்கணக்கான வருடங்களாக பார்த்திருக்கிறான். அந்திகிறிஸ்து வை ஜனங்கள் பின்பற்ற செய்யும்படி அவர்களை அவன் கவர்ந்திட செய்வான். கள்ள தீர்க்கதரிசியின் வேலை என்ன அந்திகிறிஸ்துவை பற்றி மக்களுக்கு இருக்கும் எண்ணத்தை

மெருகேற்றி அவர்கள் அவனை தொழுது கொள்ளும்படி தூண்டுவதுதான். இதுதான் பிரதான நோக்கம், பிரதான இலக்கு.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆமா. அந்திகிறிஸ்துவாகிய இந்த உருவத்தை அவன் வல்லமையாக நிறுத்துவதை பற்றி சொல்லுங்க. இந்த உருவத்தை ஏற்றுகொள்ள ஜனங்கள் நிராகரிக்கும் போது அவர்கள் என்ன சம்பவிக்கும்?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:.**.இப்ப, ஒரு விஷயத்தை கவனிக்கணும் தேவன் தான் தமது சர்வத்துவத்தில் இவற்றை சம்பவிக்கும்படி அனுமதிக்கிறார். இந்த உருவத்திற்கு உயிர் கொடுக்கும்படி தேவன் கள்ள தீர்க்கதரிசிக்கு வலிமையை கொடுத்தார், சரியா. இப்ப, இங்க, இரண்டும் இருக்குது சாத்தான், மற்றும் அந்திகிறிஸ்து, அதோடு கூட இப்ப கள்ள தீர்க்கதரிசி, சுதந்தரமா திரிகிறது. தேவன் அனுமதிப்பதை மட்டும்தான் அவைகளால் செய்ய முடியும். ஒன்னு அந்த மிருகத்தை தொழுதுகொள்ளவேண்டும் இல்லைன்னா உங்க வாழ்க்கை அதோடு முடிந்து போகும் அவ்வளவுதான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆல்ரைட். இப்ப, இப்போது இதை கேட்டுகொண்டிருக்கிற உங்களில் பலர், கேள்விகளோடு இருக்கலாம், “அதாவது, நா ஆன்மீகவாதிதான், ஆனா எனக்கு இந்த மார்க்கங்களின் உபதேசத்தில் நம்பிக்கை இல்லை. இயேசுவை பற்றி உறுதியாக எனக்கு தெரியாது, அதோட அவர்தான் தேவனை அடைய ஒரே

வழின்னு எனக்கு தோனல என்றிடலாம்.” அல்லது நீங்க ஒருவேளை, இதை நாங்கள் வெளிப்படையாக சொல்வதை கேட்டு கோபத்தோடு இருக்கலாம். இதை வேதம் தான் சொல்கிறது என்பதை நீங்கள் கவனிக்கும்படி நான் விரும்புகிறேன், இந்த வெளிபடுத்தின விசேஷத்தை கொடுத்தவர் இயேசு தான் என்பதை பாருங்கள். இது அனைத்தும் வரபோகிற உண்மை சம்பவங்களாக இருக்கிறது.

சரி, எட், நீங்க இப்படி யோசித்துகொண்டிருப்பவர்கள் மறுபடியும் இதை நன்கு நித்தாநித்து அறிந்து இயேசுவிடம் வரவும் அவர் தங்கள் வாழ்வில் வர சந்தர்ப்பம் கொடுத்து, அவர்கள் வாழ்க்கையை மாற்ற இடம் கொடுக்க அவர்கள் பாவங்களை அவர் மன்னிக்கவும், அவரை இவர்கள் தனிப்பட்ட விதத்தில் அறிந்துகொள்ளவும், மெய்யான தேவனை அறிந்துகொண்டு அனுபவிக்க என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை கொடுக்க விரும்புகிறீர்கள் என்று சொல்ல முடியுமா?

**டாக்டர் எட் ஹிந்த்சன்:..**சரி, வெளிப்படுத்தின விசேஷம் நன்மைக்கும் தீமைக்கும் இடையில் மிகப்பெரிய போராட்டம் நடப்பதை தெளிவாக கூறுகிறது என நினைக்கிறேன், இந்த புத்தகத்தினுடைய வாக்குத்தத்தம் என்னன்னா தேவன் தான் போராட்டத்தில் ஜெயிக்க போகிறார். வெளிப்படுத்தின விசேஷத்தில் இருக்கிற கேட்ட செய்தி அவிசுவாசிகளுக்கான கேட்ட செய்தியாக இருக்கிறது. அவர்கள் அந்தி

கிறிஸ்துவால் வஞ்சிக்கப்பட்டு இருக்கிறார்கள்; அவர்கள் கள்ள தீர்க்கதரிசிகளால் வஞ்சிக்கப்பட்டு இருக்கிறார்கள். நற்செய்தி என்னனா கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கிறவர்கள் எல்லாரும் உபத்திரவ காலத்திற்கு முன்பாக எடுத்துகொள்ளப்படுதலில் எடுத்துகொள்ளப்படுவார்கள், அதோடு உபத்திர காலத்தின் போது விசுவாசத்தை தழுவிக்கொள்ளும் நபர்களுக்கும் நற்செய்தி இருக்கிறது. ஒன்று நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும் உலகமானது வேதம் குறிப்பிட்டு சொல்லுகிற அர்மகெதானை நோக்கி மிகப்பெரிய இறுதி கட்டத்தை நோக்கி போய்கொண்டு இருக்கிறது என்றால், அது சம்பவிக்கும்போது, நீங்க எந்த பக்கம் நிற்பவர்களாக இருப்பீர்கள்? அந்த நேரத்தில் நீங்க எங்க இருப்பீங்க? தேவன் பக்கம் இருப்பீங்களா அல்லது சாத்தான் பக்கம் இருப்பீங்களா? சத்தியத்தின் பக்கமா அல்லது கள்ள தீர்க்கதரிசியின் பக்கமா?

உங்களுடைய இருதயத்தை நீங்களே ஆராய்ந்து பாருங்க, "நா எதை உண்மையில் நம்புகிறேன்? அதை எதற்காக நான் நம்புகிறேன்? என்னுடைய பாவங்க்ளுகாக மரித்த இயேசுவை போல என்னை நேசிக்க கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா? சிலுவையில் எனக்கு பதிலாக தொங்கினாரே? எனக்கு பதிலாக தேவனுடைய கோபாக்கினை அவர் மீது ஊற்றபட்டதே? இயேசு உங்களை நேசித்தது போல யாரும் உங்களை நேசிக்கவில்லை. இயேசு உங்களுக்காக செய்ததை போல வேறு யாரும் உங்களுக்காக நடந்துகொள்ள வில்லை. இயேசு

உங்களை இரட்சித்தது போல யாரும் உங்களை இரட்சிக்க முடியாது. அவர் உங்களை மாற்றும் விதமாக யாராலும் உங்களை மாற்ற முடியாது. இப்ப நீங்க தீர்மானிக்க வேண்டிய கட்டத்திற்கு வர வேண்டும், சொல்லுங்க, “அவருக்கு சரி என்று சொல்லுகிற நேரம் வந்துவிட்டது.”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, நேயர்களே, இப்போது அதை செய்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இப்படி செய்வதை எதுவும் தடுக்காதபடி பார்த்துகொள்ளுங்கள். இப்போது தேவன் உங்களோடு இடைபட்டிருப்பார் என்றால், உங்கள் தலைகளை தாழ்த்தி அவரை உங்கள் வாழ்வில் வர அழைத்திடுங்கள். உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்புங்கள். சொல்லுங்க, “தவனே, என் பாவத்திலிருந்து உம்மிடமாக நான் திரும்புகிறேன்.” உங்க பாவத்திலிருந்து விலக உங்களுக்கு ஒருவேளை பெலன் இல்லாமல் இருக்கலாம். பெலன் தரும்படி அவரிடம் கேளுங்கள். அவர் உங்கள் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றிடுவேன் என்கிறார். உங்கள் வாழ்வில் அவர் செயல்பட இடமளியுங்கள்.

சரி, அடுத்த வாரம், ஆட்டக்காரர்களை பற்றி பார்ப்பதில் கொஞ்சம் ஓய்வெடுத்துகொள்வோம். அடுத்த வாரம் உபத்திரவ காலத்தின் நடுபகுதியில் நடக்க இருக்கும் செயல்களை பற்றிய காரியங்களை தொடர்ந்து பார்க்க இருக்கிறோம். இங்க இயேசு வேதனையோடு

இருக்கும் ஸ்திரீயை பற்றி சொல்கிறார், பிரசவ வேதனை, பிள்ளையை பெற்றெடுத்தல். இறுதியாக வரும்போது அங்க என்ன நடக்கிறதென்று பார்க்கலாம். அந்த பிரசவ வேதனை அதிகரித்துகொண்டே இருக்கிறது அங்க குறுகிற காலம் தான் மிஞ்சி இருக்கிறது. சரி, ஆண்பிள்ளை, அடுத்து நியாயத்தீர்ப்புகள், துரிதமாக அடுத்ததடுத்து இருக்கு. இதெல்லாம் சரியில்லை தவறு என்று நினைக்கிறீர்களா, கலச நியாயத்தீர்ப்பை பார்க்கும்வரை காத்து இருங்கள். அடுத்த வாரம் தொடர்ந்து பேசிடலாம். தவறாமல் பார்ப்பீர்கள் என நினைக்கிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.